செ.வெ.எண்:43 தேதி.12:01:2011

# ஆசிரியர் தேர்வு வாரியம்,

ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,4–வது தளம்,
கல்லூரி சாலை, சென்னை – 600 006

**http://trb.tn.nic.in**

செய்தி குறிப்பு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் நியமனம் 2009 – 2010

2009– 2010 ம் கல்வி ஆண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 1024 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, ஆசிரியர் தேர்வு வாரியம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. சான்றிதழ் சரிபார்ப்பு முடிவுற்ற நிலையில், பணிநாடுநர்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் 1:5 என்கிற வீதத்தில் தெரிவு செய்யப்பட்டு பாடவாரியாக நேர்காணலுக்கு பதிவஞ்சல் மூலம் அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

உதவி பேராசிரியர் பணி நியமனத்திற்கான நேர்காணல், சென்னை–6. ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, ஆசிரியர் தேர்வு வாரியத்தில் 19.1.2011 முதல் 5.2.2011 வரை நடைபெற உள்ளது.

மேலும் நேர்காணலுக்குத் தெரிவு செய்யப்பட்ட பணிநாடுநர்களின் விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான http://trb.tn.nic.in / வெளியிடப்பட்டுள்ளது. நேர்காணலுக்கு தெரிவுசெய்யப்பட்டு அழைப்புக் கடிதம் பெறப்படாத நபர்கள் இணையதளத்தில் உள்ள விவரங்களின்படி நகல் எடுத்து நேர்காணலில் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை